முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் ராகு பகவான் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

04.02.2019, திங்கட்கிழமை

1. **திருவெனும் பேரருள் கொண்ட அரங்கா**
   **தேக்கமிலா உலக உயிர்கட்கு**
   **தருமம் வழங்கும் ஞான தேசிகா**
   **தவசியே உன் தருமம் மெச்சி**
2. மெச்சியே ஒளி சூட்சும நூலை
   மொழிகுவேன் **விளம்பி கலை திங்கள்**
   **அச்சமிலா மூவேழு திகதி சோமவாரம்**
   **(விளம்பி வருடம் தை மாதம் 21ம் நாள் 04.02.2019, திங்கட்கிழமை)**
   **அரவு பகவான் யானும் உரைத்திடுவேன்**
3. உரைத்திடுவேன் உலகோர் நலம்பெற
   உயிர்காக்கும் மருத்துவ சேவை
   குறைவில்லா வளர்ச்சி காண
   குவலயம் பிணி இல்லா பாதுகாப்பு காண
4. காணவே அரங்கன் காட்டும்
   கந்தவேலன் சக்தி நெறிக்கு வந்து
   ஞான அமுதுண்டு உலக மக்கள்
   ஞானிகள் பூசை செய்ய வேண்டும்
5. வேண்டியே வைத்திய பெருமக்கள்
   வேலவனை வணங்கி தருமப்படி
   தொண்டுள்ளம்பட சேவை ஆற்ற
   தெரிவிப்பேன் அவுசத துறை வளர்ந்து
6. வளர்ந்து சமூகம் காத்திடும்
   வல்லமையான விஞ்ஞானம் பெருகி
   தளர்விலா சமுதாயம் ஆகும்
   தமிழகம் தொட்டு அரங்க ஞானி வழி
7. வழிதனில் பேராற்றல் மக்களிடை
   வள்ளல் சக்தியாகப் பரவி
   அழியாமை நிலை உறுதியாகும்
   ஆறுமுகனார் வழிபாடு பெருகி வர
8. வருகவே மக்களிடை பக்குவம்
   வந்தடையும் உயர் குணங்கள்
   முருகப்பெருமான் மகா சூட்சும
   முழுமை ஞானம் எங்கும் பரவி
9. பரவியே கலியுகம் தானும்
   பழுதில்லா ஞான யுகமாகும்
   துறவுநிலை போல மக்களிடை
   தன்னலமிலா பொதுநலம் பெருகி
10. பெருகியே சமூக உயர் மாற்றங்களும்
    பெருமைபட சேவை மார்க்கங்களும்
    ஆறுமுக அரங்கன் வழிகாட்டலில்
    அற்புதம்பட வளரக் கூடும்

11. கூடாத எதிர் மறைகளெல்லாம்
குருராசன் சேவை வளர விலகும்
நாடவே தரும பலம் தன்னால்
ஞானயுகமாக மாற்றம் பெறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

முருகப்பெருமான் துணை

**மகான் ராகு பகவான் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

திரு என்கிற கடவுள் சக்தியாகிய பேரருளை அளவிலாது கொண்டிட்ட அரங்கமகா தேசிகனே தடைகள் இன்றி தாராளமாய் உலக உயிர்களை காத்திடும் பொருட்டு தொடர்ந்து தருமங்களை செய்து அன்னதானம் வழங்கி பசிப்பிணி ஆற்றி உயிர்களை காக்கும் மகா ஞானியே ஞானதேசிகனே அரங்கமகா தேசிகனே மகா தவசியே அற்புதமும் ஆற்றலும் மிக்க உமது தருமத்தினை போற்றியே **விளம்பி வருடம் தை மாதம் 21ம் நாள் 04.02.2019, திங்கட்கிழமையான** இன்றைய தினமதனிலே ஒளி சூட்சும நூல்தனையே ராகுபகவான் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் ராகுபகவான்.

உலகினில் உயிர்களை காக்கின்ற மருத்துவ சேவைகளை செய்கின்ற மருத்துவ துறை சம்பந்தப்பட்ட மருத்துவர்கள், செவிலியர், மருந்தகம், மருத்துவ வணிகம் என அனைத்து வகையிலும் பணி புரிவோர் தமது தொழிலில் குறையின்றி நிறைவுடன் சேவைகள் செய்து வளர்ச்சி அடைந்திடவும் உலகினில் மக்கள் நோயின்றி பாதுகாப்புடன் வாழ்ந்திடவும் வேண்டுமாயின், உத்தம மகா ஞானி ஆறுமுக அரங்கமகா தேசிகனார் காட்டுகின்ற தூயநெறியினை பின்பற்றி நடந்து உயிர்க்கொலை தவிர்த்து, புலால் மறுத்து, சுத்த சைவ உணவினை மேற்கொண்டு சைவநெறியினில் வந்து கந்தவேலன் முருகப்பெருமானின் சக்திமிக்க தூய ஞானநெறிகளை கடைப்பிடித்து ஞானிகளை பூஜித்து ஏழாம் படை வீடு துறையூர் ஓங்காரக்குடிலின் அளிக்கப்படுகின்ற ஞானஅமுதாகிய உணவினை பக்தியுடன் வணங்கி உண்டு வருவதுடன் மரணத்தை வென்றிட்ட மாமேருக்களான ஞானிகளின் திருவடி பற்றி, தினம் தினம் தவறாமல் ஞானபூஜைகளை செய்து வர வேண்டும்.

புனிதமான மருத்துவத்தினை சேவை மனப்பான்மையுடன் செய்கின்ற மருத்துவ பெருமக்கள் எல்லாம் மருத்துவத்தின் தலைவனான முருகப்பெருமானை வணங்கி தருமத்தின் வழிசென்று தர்மப்படி நடந்து தொண்டுள்ளம்பட சேவை ஆற்ற வேண்டும். தொண்டுள்ளத்துடன் மருத்துவர்கள் சேவை ஆற்றிட மருத்துவத் துறை வளர்ந்து மனித சமூகத்தினை வளமுற காத்திடும். வல்லமைமிக்க விஞ்ஞானமும் பெருகி தளர்ச்சியற்ற ஆரோக்கியமான சமுதாயமாக மனித சமுதாயம் ஆகிடும்.

மனித சமுதாயத்தினில் தொண்டுள்ளம் பெருகி ஜீவதயவு பெருகிட தமிழகத்திலிருந்து துவங்கி ஆறுமுக அரங்கமகா தேசிகனாரின் பேராற்றல் மக்களிடையே பரவி வள்ளல் சக்தியாக, ஜீவதயவாக பரவி மக்களுக்கு அழிவிலாமை எனும் மரணமிலாப் பெருவாழ்வை அடையும் நிலை உறுதியாகும், இயற்கை பேரிடர்களிலிருந்து அழிவிலாத நிலை உருவாகும்.

உலகினில் ஞானத்தலைவன் முருகப்பெருமானின் வழிபாடு பெருகி வரவர, மக்களிடையே பேதங்கள் மறைந்து பக்குவங்கள் வந்தடையும் உயர்வான குணங்கள் மேலோங்கி முருகப்பெருமானின் மகா சூட்சுமம் மிக்க முழுமை உண்மை ஞானம் உலகமெங்கும் பரவி கலியுகமும் வலுவிழந்து குறைவற்ற ஞானயுகமாக ஆகிடும்.

துறவு மேற்கொண்ட நிலை போல, மக்களிடையே தன்னலம் இல்லாத பொதுநலம் மேலோங்கி மனித சமூகத்தில் உயர்வான மேன்மைமிக்க மாற்றங்கள் உருவாகிடும். சேவை செய்யும் சேவை மார்க்கங்களும் பெருமைபட முருகப்பெருமானின் வழிகாட்டலில் அற்புதமாய் நடந்து வளர்ச்சியடைந்திடும்.

உலகினில் துன்பத்தை விளைவிக்கும் எதிர்மறை செயல்களும், தீவிரவாத செயல்களும் அரங்கமகா தேசிகனாரின் சேவைகள் வளரவளர உலகினை விட்டு விலகிடும். இந்த உலகம் தருமபலத்தினால் ஞானயுகமாக மாற்றம் அடைந்து அமைதிமிக்க ஞானஆட்சி உலகினில் முருகப்பெருமான் தலைமையில் நடந்து மக்கள் சிறப்பான வாழ்வினை வாழ்வார்கள் என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் ராகு பகவான்.

–சுபம்–